புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
June-2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS

=====================================================================

# வேளாண் மாந்தர்களின் பொருளாதாரப் பிரச்சினைகள்

முனைவர் ஞா.அலெக்ஸ் அருள் தாசன்
உதவிப் பேராசிரியர்
தூய யோவான் கல்லூரி பாளையங்கோட்டை
திருநெல்வேலி -627002

=====================================================================

ஆய்வுச் சுருக்கம்

பொருளாதாரம் என்பது பொருளை அடிப்படையாகக் கொண்ட வாழ்வு முறையைக் குறிப்பதாகக் கொள்ளலாம். வாழ்வுக்குப் பொருளே ஆதாரம். பொருளின் உற்பத்தி அதன் விளைவுகள் ஆகியவற்றைப் பற்றிப் பேசுகின்ற இயல் பொருளியல் எனலாம். இந்திய விடுதலைக்குப் பின் இந்திய வேளாண் உற்பத்தி முறையில் பெருமளவில் மாற்றம் நிகழ்ந்தது. இருப்பினும் விவசாயத் தொழிலாளர்கள் பண்ணையார் உறவு முறையில் பெரியமாற்றம் நிகழ்ந்துவிடவில்லை. இம்மாற்றம் நிகழாமைக்கான காரணங்களும் அதனால் விவசாயத் தொழிலாளர்களின் பொருளாதாரத்தில் எழும் பிரச்சினைகளுக்கும் வேளாண் புதினங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வதே இக்கட்டுரை.

## முன்னுரை

மனிதனின் வாழ்க்கைமுறை இயற்கையை அடிப்படையாகக் கொண்டது. இயற்கையின் வேறுபட்ட அமைப்புகளுக்கு ஏற்ப மொழி, பண்பாடு மற்றும் சிந்தனைகள் வேறுபடுகின்றன. எனவே மக்களின் தொழில்முறை, உணவுமுறை, பழக்கவழக்கம், பொழுதுபோக்குகள், நம்பிக்கைகள், சிந்தனைகள் ஆகிய அனைத்தும் அவர்களின் இயற்கையுடனான வாழ்க்கை சூழலுக்கேற்ப அமைகின்றன எனலாம். நில அடிப்படையிலான செயல்பாடுகள் மக்களின் பண்பாட்டு நடவடிக்கைகளை வேறுப்படுத்திக் காட்டுகின்றன. பண்டைக்கால நிலவியல் அடிப்படையிலான குறிஞ்சி, முல்லை போன்ற வாழ்க்கை முறையினை இதற்கு சான்றாகக் கொள்ளலாம். இத்தகைய சூழலில் வாழ்கின்ற விவசாயத் தொழிலை நம்பியுள்ள மக்களின் பொருளாதார நிலை பின்தங்கி உள்ள நிலையினை நவீன இலக்கியமாகியப் புதினங்களை முன்வைத்து விளக்கிக் கூறுவதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாக அமைகிறது.

## ஆய்வு முறை

விவசாயத் தொழிலாளர்களின் பிரச்சினைகளான வேலையின்மை, நிலமின்மை, கூலிப்பிரச்சினைகள், வறுமை, சுரண்டல் போன்றவைகளினால் ஏற்படுகின்ற பொருளாதாரப் பின்னடைவை மையமாகக் கொண்டு வெளிவந்துள்ளப் புதினங்களை ஆய்வு ஆதாரமாகக் கொண்டுள்ளது இக்கட்டுரை.

## வேலையின்மை

இந்திய நாட்டின் சமூகப் பிரச்சினைகளுக்கு அடிப்படையாக இருப்பது வேலையில்லாத் திண்டாட்டம் ஆகும். படித்த இளைஞர்கள் மட்டுமின்றி படிக்காத உடல் உழைப்பை மட்டுமே நம்பி இருக்கின்ற பாமரர்களும் வேலையின்றி அவதிப்படுகின்றனர். இந்தியா போன்ற வளர்முகநாடுகளில் விவசாயமே முதன்மைத் தொழிலாகக் கருதப்படுகிறது. குறிப்பாக இந்தியாவினுடையப் பொருளாதாரமே விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட

பொருளாதாரம். இதனால் நிறைந்த வேலைவாய்ப்பத் தருவதும் விவசாயத் தொழிலே. ஆனால் தமிழகச் சூழலால் விவசாயத் தொழிலாளர்கள் வேலையில்லா நிலைமைக்கு ஆளாகி அவதிப்படும் நிலையை நாவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. "மொதலாளீ! பத்துநாவேலகெடச்சாலும் கெடைக்கிது, பதினஞ்சிநா கெடச்சாலும் கெடைக்கிது மாசம் முப்பதும் இதக்கொண்டு தான் வயித்த கழுவ வேண்டியிருக்கிறது. கம்புவேலையோ ஆனவெலயொ ஆனவெலகுதிரவெகையா ஏறிப்போச்சது" வாங்கித்தின்ன முடியல்ல அதுதான் கேக்கோம் மொதலாளீ!"[1] என கரிசல் நாவலில் வரும் ரங்கண்ணன் குறிப்பிடுகிறான்.

விவசாயம் பொய்த்துப் போவதால் விவசாயம் சார்ந்த பிற தொழில்களும் பாதிக்கப்படுகின்றன. என மானாவாரி மனிதர்கள் என்னும் நாவலில் காட்டப்படுகிறது."கிணறுகளில் தண்ணீர் நிறைய இருந்து……… கமலை இளைத்த சமங்களில் அவனுக்கு எருமை மாட்டுத் தோல்களில் பறிதைக்கிற வேலை. வெகுவாகக் கிடைத்தது. இப்போது அதலாம்போச்சு…!என்கிற வெறுமையின்.. விரட்டலில் சுமையைத் தூக்கிக் கொண்டு இப்படி அலைவதாய்ப் போயிற்று"[2] என ஆசிரியர் குறிப்பிடுகின்றார். மேலும் உழைக்கத் தயாராக இருக்கும் இளைஞர்களுக்கு உரிய வேலைவாய்ப்பு இல்லாமையாலும் வேறுஊர்களுக்கு சென்று பிழைக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. லட்சுமணன் எந்த வேலையும் திறமையாகச் செய்யக் கூடிய நல்ல பையன்தான், அதுவும் ஊர் பொதுக் காரியங்களில் பசியையும், தாகத்தையும் கூட மறந்துவிட்டுப் பாடுபடக்கூடியவன். வெள்ளை சோளத்தப் போல் ஒளிவுமறைவிக்காத நேர்மையான பேச்சும் நடத்தையும் கொண்டவன். அவனுக்கு ஏற்றவேலை எதுவும் இங்கே கிடைக்காமல் சற்று சஞ்சலம் கொண்டிருந்தான்.

இராஜம்கிருஷ்ணனின் சேற்றில் மனிதர்கள் நாவலில் விவசாயத் தொழிலாளர்கள் குடும்பங்களில் படித்துவிட்டு வேலை இல்லாத இளைஞர்களின் அவலம் சுட்டிக்காட்டப்படுகின்றது. சண்முகம் வாய்க்காரின் மகள் காந்தி படித்து விட்டு வேலை இல்லாமல் சிரமப்படுகிறாள். தனது தந்தையார் விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தில் தலைவராக இருப்பதை அவள் விரும்பவில்லை. எனவே தனது படிப்பிற்கேற்ற அரசாங்க வேலை கிடைக்கவேண்டுமென்றும் அதற்காக என்ன விலை கொடுக்கவும் தயார் எனவும் பேசுகிறாள்.

கட்சி அது இதெல்லாம் எனக்கு ஒருசுக்கும்கிடையாதுங்க சொல்லப்போனா, இந்த வீட்டுல நானும் விவசாயத் தொழிலாளிஇல்ல, எங்கண்ணணும்இல்ல, எனக்கு எங்கேனும் வேலைகிடைக்கும்னா நான் இப்பவே அதுக்கு என்ன செய்யனுமோ செய்யத் தயார். மூணு வருசமா ஸ்கூல் முடிச்சிட்டுக் கஷ்டப்படுகின்றேன். மேல படிக்கும் இத்தனை நாளா பொருளாதார நிலைமை இடம் கொடுக்கல ...."[3] என குறிப்பிடுகின்றாள்.

*நிலமின்மை*

நிலத்தை மையமாக வைத்து அமைகின்ற பொருளாதார கட்டமைப்பில் நிலமே அடிப்படை , நிலமற்றவன் கீழான நிலையிலும் வைக்கப்படுகின்றான். இதன் மூலம் நிலம் எத்தகைய முறையில் இன்றியமையாததாக உள்ளது என்பதனை அறிய முடிகிறது.

தாகம் நாவலில் ஆசிரியர் "ஒருமனுசன்னு பொறந்தா அவனுக்கு ஒரு பொம்பளை எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் வேர்வைசிந்தி ஒழைக்கிற வெவசாயிக்கு நெலம் சொந்தமா இருப்பதும் வேர்வை சிந்தி ஒழைக்காதவங்ககிட்டே இருக்கிற நெலமெல்லாம் அவனுக்கு அது பொண்டாட்டியப் போல அல்ல, வேசியப்போல, வேசியும் பொண்டாட்டியும் ஒண்ணாவ முடியுமா?"[4] என்னும் கருத்தினைக் கூறி அதன் மூலம் உண்மையினை உணர வைக்கின்றார்.

நிலமில்லாத பொழுது புறம்போக்கு நிலத்தையாவது தனது சொந்த நிலமாகப் பாவித்துச் சொந்த விவசாயம் செய்ய வேண்டும் என்கிற ஏக்கம் நிறைந்தவனாக மாமிசப்படைப்பு நாவலில் கந்தையா சுட்டப்படுகின்றான். ஆற்றின் செங்கோணவளைவின் உயரே, ஊரின் மேற்குத் தலைமாட்டில் இசப்பாற்றின் மேல்கரையில், பிராமணருக்கும் வெள்ளாளர்களுக்குமாக அடுத்தடுத்து இருந்த சுடுகாட்டை ஒட்டி ஆற்றின் உள்வளசல் மேடாக இருந்த அந்த நான்கு ஏக்கர் பரப்புக்கு சுடுகாட்டுத்தோப்பு என்று பெயர்.

பூவலிங்கம் உங்ககிட்ட ஒருகாரியம் கேக்கனும், இன்னகெடக்கில்லா சுடுகாட்டுத்தோப்பு! அதுவே ஒரு தோட்டம் போட்டா என்னா?

போடலாம் எனக்கு அப்பன் வீட்டு இடமா"[5] இந்த வரிகளின் மூலம் கந்தையாவின் ஏக்கத்தினையும் திடமில்லாத நிலையினையும் ஆசிரியர் படம்பிடித்துக்காட்டுகின்றார்.

ஈரம்கசிந்தநிலம் நாவலில் கட்டப்படுகின்ற பெரும்பான்மைச் சாதியினராகிய கவுண்டர்கள் ஓரளவு மானாவாரிநிலம் கொண்டவர்களாகக் காட்டப்படுகின்றனர். இதரசாதியினர் குறிப்பாக மாதாரிகள், பறையர்கள், வலையர்கள் போன்ற அடித்தளமக்கள் நிலமற்ற ஏழைகளாகவே காட்டப்படுகின்றார்கள். மலையோரக் காடுகளில் மரம், முள், புதர் என்று இருந்தவை எல்லாம் வெட்டித் தீர்த்து காடாக்கிக்கொண்டுகாடை, கௌதாரி, என்று தேடிக் கொண்டு திரிவார்கள். மலை மேல் உயர போய் மூங்கில்களை வெட்டி வந்து ஊர்க்காடுகளுக்குக் கொண்டு போவார்கள், சீயக்காய், அரப்பு, இலந்தைப்பழம் என்று அவ்வப்போது விளைகின்ற எல்லாம் கொண்டு போய் விற்று விட்டு வருவார்கள். சந்தைகளில் அவர்களுடைய வியாபாரம் எல்லாம் பலமாய் இருக்கும். வங்கநரி, மந்திக்கரி, முயல்கள், கீரிக்கரி என்று கிடைத்தது எல்லாம் தோலாம் பாளையத்துவைத்தியருக்குக் கொண்டு போய்க் கொடுப்பார்கள் மலைத்தேன் தேடி அமாவாசை சமயத்தில் அலைந்து திரிவார்கள்"[6] எனக் குறிப்பிடுகின்றார் சி.ஆர்.இரவீந்திரன்.

கூலிப் பிரச்சினைகள்

நிலம் உழைப்பு, மூலதனம், அமைப்பு ஆகிய நான்குமே பொருள் உற்பத்திக்கு அடிப்படை. உழைப்பு தவிர ஏனைய மூன்றும் பொருள் படைத்த ஒரு சாராரிடம் அமைந்து விட வறுமையும் ஏற்றத் தாழ்வும் அதிகரிக்கின்றது. உழைப்பை மட்டுமே மூலதனமாகக் கொண்டு வாழும் உழைப்பாளிக்கு உழைப்புக்கான கூலி முறையாக வழங்கப்படுவதில்லை. உழைப்புக்கான கூலி என்ற முறை இல்லாத போது உழைப்பாளிக்கு உண்ண உணவும் உடையும் இன்ன பிற தேவைகளும் கிடைப்பதில் சிக்கல் ஏற்படுகிறது.எனவே உழைப்புக்கான கூலி வேண்டிப் போராட நேர்கிறது. இத்தகைய கூலிப் போராட்டமே சமூகநிலையில் முரண்பாட்டையும் மோதலையும் உருவாக்குகிறது எனலாம். தங்களுடைய உணவுக்குப் போதாத அளவுக்குக் கூலி உள்ளது என்பதையும் கூலி இல்லாத நாட்களிலும் நோயுள்ள காலங்களிலும் கூலியாட்கள்படும் வேதனையையும் கடன் என்பது அவர்களது வாழ்வை மிகவும் துன்புறுத்தும் என்பதையும் ஒரு பாத்திரத்தின் வாயிலாக எடுத்துரைக்கிறார் ஆசிரியர். "ஒரம்பூச்சிமருந்து அதுஇதெல்லாம் பண்ணுற தொழிற்சாலை செலவெல்லாம் அந்த மொதலாலிக அதுந்தலயிலவச்சு வெவசாயிதலயில கட்டுறாங்க. கூலி அதிகம் சம்பளம் அதிகம்னு சாமான்வெலய ஏத்துறாங்க. நீங்க என்னமோ அஞ்சு ரூபாய் ஏழு ரூபாய்க்கிட்டோம், ஏழ ஒன்பதாக்கிட்டோம்னு பெறிசாச் சொல்லிக்கிறீங்க. ஒருநாயித்துக்கிழமைஉண்டா? சம்பளத்தோட லீவு உண்டா, சீக்காப்படுத்தா ஏன்னு கேக்க நாதி உண்டா?"[7] இவ்வாறு வீரபத்திரனின் வாயிலாகவே ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்.

போர் அடித்து நெல் குவியல் போட்ட பின்னர் காற்றுக்கு விட்டுத் தூற்றி அம்பாரமாக்கிய பின்னர் மொத்தம் வந்த நெல்லை மூன்று பங்காகப் பிரித்து அதில் இரண்டு பங்கை நிலச்சுவான்தாரர்களுக்கு ஒதுக்கி விட்டு, பாக்கியுள்ள ஒரு பங்கில் முதலில் கூலி அதாவது அறுவடை அடிப்புக் கூலி அளந்து விட வேண்டும். அதன் பின்னர் முதலில் சாமி குறுணி என்னும் பெயரில் ஒருமரக்கால் (பழைய பட்டணம்படிக்கு நாலுப்படி ஏழத்தாழ ஆறு லிட்டர் அளவுக்கு சற்று அதிகமாக இருக்கும்) இரண்டாவதாக களத்திற்கு நிலச்சுவான்தார் தனது பிரதிநிதியை அனுப்பியிருக்கிறார். அதற்குக்கங்கணம்என்றுபெயர். அவருக்குக் கங்காணஅளப்பு என்ற பெயரில் மூன்று மரக்கால் கொடுக்க வேண்டும். மூன்றாவது நிலச்சுவான்தாருக்கு இளைப்பு என்னும் பெயரில் இரண்டு மரக்கால் நெல் (அதாவது நிலச்சுவான்தாரின் பிரதிநிதி கங்காணமாக வந்திருப்பவர் களத்திற்கு வந்து இளைத்துப் போய்விடுவார் என்றும் அதற்கு ஈடுகட்ட இரண்டு மரக்கால் நெல்லும் தவித்துப் போய் விடுவார் என்பதற்காக இரண்டு மரக்கால் நெல்லும் அளந்து தருவது என்பதாகும்.) நான்காவதாக நிலச்சுவான்தாருடைய பங்கான நெல்லை அவருடைய வீட்டில் கொண்டு போய்ச் சேர்ப்பதற்கான வண்டி வாடகையாக அதற்காக நெல்லும் அளந்து விட்டு மிஞ்சியுள்ள நெல்லை விவசாயி தனக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சில்லறை அளப்புகள் மூலமான சுரண்டல் முறை இருந்தது"[8] என்பார். இப்படி அளப்பு முறையில் சுரண்டல் இருந்து தொழிலாளிகள் கூலியினைப் பாதித்தது போல, வெள்ளாமை இல்லாத காலத்தில் கூலிப் பிரச்சினை மேலும் பெருகிறது என்பதைப் பிறகு நாவலில் ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்.

*“அந்த நாளுல கட்டுன்னா குருதக் கொம்பாயிருக்கும். நாலணாச் சம்பளத்துக்கு கோயில்பட்டிக்குக் கெட்டுச் சோறு கெட்டிட்டு வேலைக்குப் போயிருக்கோம். இப்ப என்னன்னா ரூவாயத்தான் பார்க்க முடியுது சோத்துக்குத் தானியத்தக் காணும்.ஒவ்வொருத்தருக்கு பிஞ்சையிலேயே ரூவாகாச்சுத் தொங்கிட்டாக் கூடதாவல, தானிய வெள்ளாமையே அழுகிப் போச்சே”[9]*

*பூந்தாழங்குடி கருப்பூர்ல போன வருஷ குறுவ மகசூல் காலத்தில விவசாயத் தொழிலாளிங்க கலத்துல ஆறுபடி கூலி கேட்டுப் போராடும் போது அந்தப் பண்ணை கூலி கொடுத்துவிட்டுதுன்னு எல்லா மிராசுகளும் சேந்து போயி அதிகப்படியா கூலி கொடுக்கக் கூடாதுன்னு தடுத்துதும் இல்லாம அந்த பண்ணைய மிரட்டி பல வகையாலும் இம்சை கொடுத்ததுவேறு நாடாருமனசில வந்துபோனது”[10] எனச் ‘செந்நெல்’ குறிப்பிடுகிறது.*

*கூலிப்பிரச்சினை என்பதில் சாதி என்பதும் தலையிட்டது. அந்த சாதிக்கு இவ்வளவு கூலி இந்த சாதிக்கு இவ்வளவு கூலி என்பதும் சில சமயங்களில் நிர்ணயிக்கப்பட்டிருந்தது என்பதை,*

*“அதெப்படி... வயலு விவகாரம் வயலுலயே தீரணும்... எங்க ஜனம் ஒங்க ஜனமுங்கககத வேண்டாம். சின்னான் சொன்னதுல தப்புல்ல... ஒங்கஜனம் ... எங்கஜனங்கிறதுல்லாம் ... ஊர ஏமாத்துறவேலை...”[11] என ஊருக்குள் ஒரு புரட்சி நாவலில் பேசப்படுகிறது.*

*வறுமை*

*மனித வாழ்க்கையில் ஏற்படுகின்ற வறுமையே எல்லாத் துன்பங்களுக்கும் அடிப்படையாக அமைகிறது. வறுமை காரணமாக உணவுத் தேவையை நிறைவு செய்ய முடியாத பொழுது மனிதனின் பிற தேவைகள் பின்னுக்குத் தள்ளப்படுகின்றன. கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படைத் தேவைகளும் கூட நிறைவேற்றப்படாமலேயே இருந்து விடுகின்றன. இதனால் உழைக்கும் மக்கள் மிகுந்த சிரமத்திற்கும் துன்பத்திற்கும் ஆளாகின்றனர். இதுவும் சமூக அவலத்திற்கு அடிப்படையாக அமைந்துவிடுகிறது. இத்தகைய வறுமைச் சூழலை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள எல்லா நாவல்களும் சித்திரித்துக் காட்டுகின்றன.*

*மானாவாரிமனிதர்கள் ஆசிரியர் சூரியகாந்தன் கொங்கு மண்டலத்தில் உள்ள வறுமைச் சூழலைச் சித்திரித்துக்காட்டுகின்றார்.*

*“இங்கே உள்ள குடியானவர்களில் அவருக்கு மட்டுமல்ல, எல்லோருக்குமே கட்டுகிற கோவணத்தில் அகலத்திலாவது காடு உள்ளது. அந்த காலப் படிக்காட்டையும் உயிரைக் கையில் பிடித்து வைத்திருக்கிற மாதிரி அவரவர் காப்பாற்றி வைத்துக் கொண்டுள்ளனர். ஆனால் அந்த காட்டின் மூலம் இப்போதைக்கு எந்தவிதப் பிரயோஜனமும் இல்லை, அன்றைய சோற்றுக்கு வழி பண்ணுவதற்கே கண்கள் பிதுங்கிறபடி சிரமப்பட வேண்டியுள்ளது”[12]*

*பிறகு நாவலின் ஆசிரியர் கோவில்பட்டி வட்டாரப் பகுதி நிலைமையினைச் சித்திரித்துக்காட்டுகிறார். “ஏ கழுதஞாயம் பேசவந்துட்டயாக்கும். ஏன் பொழப்புக்கே வேட்டு வச்சிடுவேன்பாத்துக்கோ அடசும்மா கெடமுக்காத்துட்டுக்குச் செஞ்சுத்திங்கற நாயி”[13] வறுமை மனிதனின் மரியாதையும் கூடக் கெடுத்து விடுவதாக அமைவது இங்குச் சுட்டிக்காட்டப்படுகிறது.*

*பழையனகழிதலும் நாவலில் வரும் தங்கம் வாழ வசதியற்ற ஏழைப் பெண்.இவளது வறுமையே பாலியல் ரீதியாக சோரம் போவதற்குக் காரணமாகிவிடுகிறது. இவளுடைய பண்ணையார் இவளின் நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு பாலியல் ரீதியாக பணியவைக்கின்றார். “தங்கம் ராஜாவீட்டுப் பெண்ணோ மந்திரி வீட்டுப் பெண்ணோ இல்லை. அவருடையபண்ணையாள், கூலியாள், மேலும்கீழ்ச்சாதியினள், யாரும் தட்டிக் கேட்கப்போவதில்லை. குறைந்தபட்சம் கணவன் கூடக் கிடையாது. நாதி இல்லை இதைப் புரிந்து கொண்டதும் அவருடைய ஆசை பன்மடங்காய்ப் பெருகியது”[14] என்று தங்கத்தின் வறுமையே இத்தகைய அவல நிலைக்கு காரணம் என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். ... உடையார் மதியம் கூலி ஆட்கள் கலையும் நேரமாய் போவார். குளிக்கிற சாக்கில் தருணம் பார்த்தவாறு இருப்பார். தருணம் பார்த்து அழைப்பார். பம்பு கொட்டகையோ கருப்பம்கொல்லையோ எப்படிச் சாத்தியமோ அங்கு அவரது ஆசையை நிறைவேற்றிக் கொள்வார். இவளும் மறுக்கவில்லை வேறுவழியுமில்லை.*

*இருவது ஐம்பது என்று பணம் கொடுப்பார் சில சமயங்களில் பலர் முன்னிலையிலையே பணம் கொடுத்துவிட்டு, நாளைக்கு சேரியிலிருந்து ஐஞ்சு ஆளு அழைச்சுவா என்பார். அவளும் ஆட்களை அழைச்சுவருவாள், அதட்டி வேலை வாங்குவாள். வாய்க்கு வாய் உடையார்வீட்ல*

உடையார்காட்ல என்று உடையாரைப் பற்றியே பேசுவாள். அவளுக்கு சில சமயங்களில் தனது நிலைமையை நினைக்கும்பொது துக்கமாய் இருக்கும்.இவ்வாறு வறுமை காரணமாக ஏழை குடியானப் பெண்கள் சோரம் போவது சித்திரிக்கப்பட்டுள்ளது.

தாகம் நாவலில் வரும் மாரப்பன் சமூகத் தகுதியில் உயர்ந்தவன் தான் என்றாலும் வறுமை அவனையும் அவனது குடும்பத்தையும் வாட்டி வதைக்கின்றது. "சமூகத்தின் எந்தெந்தத் தாக்குதலுக்குத்தான் அவன் ஈடுகொடுப்பான்? குடும்பப்பாரம்வறுமைக்கஷ்டம், கடன்தொல்லை, சமூக நிர்ப்பந்தம், வலியோர் தாக்குதல் இத்தனைக்கும் ஒருவன் மனம்சலியாது நிற்பதென்றால் அது யாரால்தான் முடியும்? அதுவும் ஓர் ஏழைக் குடியானவனுக்கென்றால்?...."[15] மாரப்பனின் வறுமைநிலை ஆசிரியர் கூற்றாகவே சித்திரிக்கப்படுவதை இங்குக் காணலாம்.

சுரண்டல்

உழைப்பவனுக்குத் தெரியாமலேயே அவனது உழைப்பைக் கவர்தல் சுரண்டல் எனப்படும். ஒரு உழைப்பாளி செய்யும் வேலைக்கு உரிய கூலியைக் கொடுக்க மறுப்பதும் அல்லது குறைந்த கூலியைக் கொடுப்பதும் சுரண்டல் முறை எனலாம். குறிப்பிட்ட வேலைக்கு அமர்த்துவதும் அதோடு அல்லாமல் வேறு பல வேலைகளை வாங்குவதும் சுரண்டல் முறையின் ஒரு பகுதியாகும். இங்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாவல்கள் அனைத்திலும் இத்தகைய சுரண்டல் காணப்பபடுகிறது.

சுரண்டல் என்பது உழைப்பைச் சுரண்டுவது மட்டுமல்ல விவசாயிக்குத் தெரியாமல் அவனுக்குச் சொந்தமான இயற்கை வளங்களைச் சுரண்டுவதும் சுரண்டலே மலரும் சருகும் காந்திமதிநாதபிள்ளையின் சுரண்டல் முறை நயவஞ்சகச் சுரண்டலாகும்.

"காந்திமதிநாதபிள்ளையின் நிலங்களில் உள்ள கிணறுகள் ஆழப்பட ஆழப்பட பக்கத்து நிலங்களில் உள்ள கிணறுகளின் நீர் வற்றிக்கொண்டே வந்து வறண்டு போயின. ஒன்றும் தெரியாத அம்மக்களோ ஜோசியனைப் போய்ப் பார்த்துத் தங்களது ஜாதகங்களைப் பார்த்துக் கொள்ளுவார்கள். அங்கே விதைக்கப்படும் வித்துக்களும் நிலம்கீறிமுளைகுத்தும்போது தண்ணீர் இல்லாமல் கருகிப் போய் விடும். நிலம் தரிசாய்க் கிடக்கும் வேறுவழியில்லாமல் நிலங்களைக் காந்திமதிநாதபிள்ளை கேட்கும் விலைக்கு விற்றுவிட்டுப் பிற ராஜ்யங்களுக்குக் கூலிகளாகப் போய்விடுவார்கள்"[16]

## முடிவுரை

விவசாயம் சார்ந்த மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளை, புதினங்களை மையமாகக் கொண்டு ஆராயும் போது ஒரே நிலவியல் சூழலில், ஒரே சமூக அமைப்பிற்குள் வாழும் மக்கள் அரசியல், பொருளாதார, பண்பாட்டு நிலைகளில் வெவ்வேறு வாழ்க்கைத் தரத்தில் இருப்பதைக் காணமுடிகிறது. மக்களின் இத்தகைய வாழ்க்கை நிலை வேறுபாடுகளுக்குப் பொருளாதாரமும், பொருளாதார நிலையினைக் கட்டமைக்கின்ற சாதியும் காரணங்களாக அமைகின்றன எனலாம். விவசாயக் கூலிகளாக உழைக்கின்ற மக்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு என்பது கனவாகவே இருந்து வருகிறது. இதற்கு நிலமின்மையும் ஒரு காரணமாகவே உள்ளது. விவசாயக் கூலிப்பார்க்கின்றவர்களுக்கும் உழைப்புக்குத் தகுந்தக் கூலி கிடைப்பதில்லை. அதிலும் உழைக்கின்ற விவசாய மக்கள் சுரண்டப்படுகின்றனர் மட்டுமல்லாமல் அவர்களின் இயற்கை வளங்களும் சுரண்டப்படுவதால் விவசாயத்தை நம்பி வாழ்கின்ற மக்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாக வறுமையிலேயேக் காணப்படுகின்றனர் என்பதையே ஆய்வுக்கு எடுத்து கொண்டப் புதினங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

## குறிப்புகள்

1. பொன்னீலன், 1994, கரிசல், முதல் பதிப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்,சென்னை.
2. சூர்யகாந்தன், 1992, மானாவாரி மனிதர்கள், முதல் பதிப்பு, பத்மா புக் ஏஜென்ஸி – பதிப்பகம், நாகர்கோவில்.
3. இராஜம்கிருஷ்ணன், 1987, சேற்றில் மனிதர்கள், முதல் பதிப்பு, தாகம், சென்னை.
4. கு.சின்னப்பபாரதி, 1987, தாகம், முதல் பதிப்பு, அன்னம் (பி) லிமிடெட், சிவகங்கை.
5. நாஞ்சில்நாடன், 1981, மாமிசப் படைப்பு, முதல் பதிப்பு, அன்னம் (பி) லிமிடெட், சிவகங்கை.

6. சி.ஆர்.இரவீந்தர், 1997, ஈரம் கசிந்த நிலம், முதல் பதிப்பு, தாகம், சென்னை.
7. இராஜம்கிருஷ்ணன், 1987, சேற்றில் மனிதர்கள், முதல் பதிப்பு, தாகம், சென்னை.
8. அ.சீனிவாசன், 1991, கிராமப்புறப்பாட்டாளிகளைநோக்கி, முதல் பதிப்பு, அன்னம் (பி) லிமிடெட், சிவகங்கை.
9. பூமணி, 1990, பிறகு, முதல்பதிப்பு, தாமரைச் செல்வி பதிப்பகம், சென்னை.
10. சோலை சுந்தரபெருமாள், 1999, செந்நெல், முதல்பதிப்பு, கமலம் பதிப்பகம், திருவாரூர்.
11. சு.சமுத்திரம், 1984, ஊருக்குள்ஒருபுரட்சி, முதல் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
12. சூர்யகாந்தன், 1992, மானாவாரி மனிதர்கள், முதல் பதிப்பு, பத்மா புக் ஏஜென்ஸி – பதிப்பகம், நாகர்கோவில்.
13. பூமணி, 1990, பிறகு, முதல் பதிப்பு, தாமரைச்செல்வி பதிப்பகம், சென்னை.
14. சிவகாமி, 1989, பழையன கழிதலும்,முதல் பதிப்பு, சேற்றில் மனிதர்கள், முதல் பதிப்பு, தாகம், சென்னை. அன்னம் (பி) லிமிடெட், சிவகங்கை.
15. கு.சின்னப்ப பாரதி, 1987, தாகம், முதல் பதிப்பு, அன்னம் (பி) லிமிடெட், சிவகங்கை.

********* ********* ********** ********* ********* ********** ********** **********